**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 27.03.2025**

**O.S. 87/2016**

**பி.வா.சா. 1 - மனோன்மணி**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் 1993 ல் எனது கணவர் வாதி பஞ்சரெத்தினத்திற்கு எழுதிய ஆவணம் என்றால் எனக்கு படிக்க தெரியாது. வா.ச.ஆ.1 ஆவணம் 1993 ல் எனது கணவரால் எழுதப்பட்டது என்றால் எனக்கு அந்த ஆவணத்தை பற்றி தெரியாது. எனக்கு வா.சா.ஆ.1 எழுதப்பட்டது பற்றி தெரியும் தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தெரியாது. வா.சா.ஆ.1ல் எழுதப்பட்டுள்ள எல்கை படி தான் வாதி சொத்தை அனுபவிக்கிறார் என்றால் அந்த எல்கைக்கும் வாதிக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது. என்னுடைய எல்கை பாதை வழியாக நான் என்னுடைய சொத்திற்கு சென்று வருகிறேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் இருப்பது எனது கணவரின் கையொப்பம் என்றால் என்னுடைய கணவரின் கையொப்பத்தை எனக்கு பார்க்கத்தெரியவில்லை. வா.சா.ஆ.1ன் படி உள்ள எல்கை அடிப்படையில் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அந்த எல்கைக்கும் எனக்கும் எந்த தொடர்பும் கிடையாது. 33 சென்ட்டின் எல்கை என்ன என்றால் பஞ்சரெத்தினத்திற்கு 15 சென்ட் தான் எழுதிக்கொடுக்கப்பட்டது. வா.சா.ஆ.1 ல் எல்கையில் கிழக்கில் முன் நான் உங்களுக்கு கிரையம் தந்த மனை, தெற்கு 3 அடி வீதி பாதையும் என் தனது மனையும், மேற்கே முருகேசராம் மனை, வடக்கு செல்வமணி, சுயம்பு, ஆறுமுகம், ஐயப்பன் இவர்களுக்கு நான் கிரையம் கொடுத்த மனை என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ல் உள்ள எல்கையும் வனஜாவிற்கு எழுதிய செற்றில்மெண்ட் ஆவணத்தில் உள்ள எல்கையும் ஒன்றுதான் என்றால் சரிதான்.

ஒரே எல்கையில் இரண்டு ஆவணம் போட முடியாது என்றால் இருவரும் எனது பிள்ளைகள் தான். ஒரே எல்கையில் இரண்டு ஆவணம் போடப்பட்டிருப்பதால் எனது செற்றில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஊசிகாட்டான் சுடலைமாடசுவாமி கோவிலும், நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள காட்டுக்கோவிலும் வேறு வேறு என்றால் சரிதான். ஊசிகாட்டான் சுடலைமாட சுவாமி கோவில் மெயின் ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கோவிலுக்கு தெற்கில் வாதி கிரையம் பெற்ற இடம் உள்ளது என்றால் சரிதான். வாதி கிரையம் பெற்ற இடத்திற்கு மேற்கில் நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள காட்டுக்கோவில் உள்ளது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள காட்டுக்கோவில் 150 வருடங்களாக உள்ளது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள காட்டுக்கோவில் 150 வருடங்களாக இல்லை நான் வழக்கிற்காக பீடங்களை வைத்து கோவிலை உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல என் தாத்தா காலத்தில் இருந்தே கோவில் உள்ளது. தாத்தா காலத்தில் இருந்தே கோவில் இருந்திருந்தால் என்னுடைய ஆவணங்களில் கோவிலை பற்றி சொல்லியிருப்பேன் என்றால் நான் பத்திரமே எழுதவில்லை அதனால் சொல்லவில்லை. 2016 ல் எழுதிய செற்றில்மெண்ட் ஆவணத்தில் பீடங்கள் இருப்பதை சொல்லவில்லை என்றால் கோவிலை சொல்லியுள்ளேன். வாதி இந்த வழக்கை தாக்கல் செய்த பிறகு முன் யோசனை செய்து சில பீடங்களை வைத்து அதை கோவிலாக நீதிமன்றத்தில் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. கோவிலில் திருவிழா நடந்ததற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் இந்த வழக்கில் எனது தரப்பில் சொத்து சம்மந்தமான பட்டா, சிட்டா, வரிரசீது, வில்லங்கம், வரைபடம் எந்த

ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. காட்டுக்கோவில் என்பது ஊர் கோவிலா, குடும்பகோவிலா என்றால் ஊர்கோவில். நான் காட்டுக்கோவிலில் திருவிழா நடந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் அதற்கான அவசியம் இல்லை அதனால் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 1 புகைப்படம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாதி எனது கணவரிடம் இருந்து 33 சென்ட் சொத்தினை வாங்கும் போது அளந்துதான் வாங்கினார் என்றால் நாங்கள் சொத்தை விலைக்கு கொடுக்கவில்லை. வாதி எனது கணவரிடம் இருந்து 33 சென்ட் சொத்தினை வாங்கியது சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. வாதி 33 சென்ட் சொத்தினைஅனுபவிப்பது சம்மந்தமாக வாதி மீது வழக்கு போட்டேனா போலீசில் புகார் கொடுத்தேனா என்றால் நான் வழக்கு தாக்கல் செய்யும் மனநிலையில் இல்லை. எனது கணவருக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். வாதி எனது கணவரிடம் இருந்து 33 சென்ட் சொத்தினை 1993 ல் வாங்கிவிட்டார் நான் வா.சா.ஆ.1 எழுதப்பட்டு 23 ஆண்டுகளுக்கு பிறகு வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. கடந்த 23 ஆண்டுகளில் வா.சா.ஆ.1 செல்லாது என சட்டப்படியான எந்த நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்றால் சரிதான். வாதி சொத்தினை அளப்பதற்கு பல முறை வருவாய் துறை மூலமாக அளக்க முயற்ச்சித்தும் நான் அதை தடுத்தேன் என்றால் சரியல்ல. வாதி 33 சென்ட்டை அனுபவித்ததை யாரும் தடுக்கவில்லை என்றால் சரிதான். வாதி சொத்தினை அளப்பதற்கு மனு கொடுத்த விபரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. நீதிமன்ற ஆணையர் மூலம் சொத்தை அளப்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் ஆட்சேபனை உண்டு. எனது கணவர் நிறைய சொத்துக்களை விற்ற பிறகு மீதமுள்ள சொத்துக்களை பாகம் வைக்காததற்கு காரணம்

அளவு குறைபாடு என்பதால் தான் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் உரிமை ஆவணம் வாதி ஆவணம் என்றால் சரியல்ல. வாதி பெயருக்கு 48 சென்ட் குறித்து எனது கணவர் வாதிக்கு எழுதிக்கொடுத்த பிறகும் அதை அபகரிக்க வேண்டி முயற்ச்சிக்கிறேன் என்றால் சரியல்ல. அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் போலியான செற்றில்மெண்ட் எழுதியுள்ளேன் என்றால் எனது கணவரின் சொத்தை தான் எழுதிக்கொடுத்துள்ளேன் அது போலியான ஆவணம் அல்ல. வா.சா.ஆ.9 எப்போது எழுதப்பட்டது என்றால் 2016 ல் எழுதினேன் மாதம், தேதி நியாபகம் இல்லை. வா.சா.ஆ.9 எழுதும் போது சொத்தின் அளவு என்ன என்றால் 10.50 இருந்தது என சொல்லிவிட்டு 12.50 என சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ.9 எழுதும் போது சொத்தினை அளந்தேனா என்றால் பத்திரத்தில் இருந்தது. மேற்படி சொத்தின் வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம். அந்த சொத்தின் எந்த பகுதியை வனஜா அனுபவத்தார் என்பதற்கான ஆதாரம் உண்டா என்றால் வனஜாவிடம் தான் கேட்க வேண்டும். நான் எத்தனை வருடமாக இந்த ஊரில் இருக்கிறேன் என்றால் 40 வருடம். வாதி 20.03.2016 மற்றும் 27.03.2016 தேததிகளில் சொத்தை அளக்க மனு செய்து வருவாய்துறை அதிகாரிகள் அளவீடு செய்ய வந்தபோது நான் சட்விரோதமான செயலில் ஈடுபட்டேன் என்றால் சரியல்ல. வனஜா சொத்தின் எல்கை என்ன என்றால் வனஜாவிடம் தான் கேட்க வேண்டும். வனஜா பெயருக்கு பத்திரம் உள்ளது தெரியும் என்றால் தெரியாது. நான் செற்றில்மெண்ட் எழுதும் போது சொத்தினை அளந்தபோது அளந்ததற்கு மனு செய்தது யார் என்றால் மனு போடவில்லை எழுதும் போது அளக்கப்பட்டது. பட்டா மாறுதலுக்காக மனு செய்தேனா என்றால் மனு போடவில்லை. எனது கணவர் 33 சென்ட்டை விற்றுவிட்டார் அது எனக்கு தெரியும் வழக்கிற்காக

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் எனது கணவரிடம் இருந்து வாதி 48 சென்ட் வாங்கிவிட்டார் அது எனக்கு தெரியும் தற்போது எங்களது இடம் குறைவாக இருப்பதால் வாதி சொத்தை அபகரிக்க வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் எனக்கு நன்றாக படிக்க தெரியும் தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது பிள்ளைகள் பெயரில் போட்டுள்ள செற்றில்மெண்ட் ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. வாதி ஆவணத்தின்படி தான் சொத்தை அளந்து அனுபவித்து வருகிறார் அதில் எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**